**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 15/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : சின்னக்கருப்பன் | த/பெ. | : ஆண்டி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : வேம்பரளி |
| தேதி | : 17.04.2026 | வயது | : 68/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இவ்வழக்கின் பிரதிவாதிக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்து காண்பித்த பின்னர் நான் அதில் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 02.07.2012ம் தேதியிட்ட வாதியின் பதிவு கிரைய பத்திரம் – அசல் (ஆவண எண்.1699/2012) வா.சா.ஆ.1 ஆகவும்
2. 09.11.2017ம் தேதிய பட்டா மாற்றம் செய்ய வேண்டி விண்ணப்ப ஒப்புகை சீட்டு இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.2 ஆகவும்
3. 09.11.2017ம் தேதிய வழக்கு சொத்தினை சர்வே செய்ய பணம் செலுத்தியதற்கான ரசீது அசல் – வா.சா.ஆ.3 ஆகவும்
4. 24.05.1979ம் தேதிய வழக்கு சொத்தில் சர்வே எண்ணில் ஹரிராமு வகையறா பெயரில் உள்ள பதிவு கிரைய பத்திரம் இணையதள சான்றிட்ட பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.4 ஆகவும்
5. 28.06.2004ம் தேதிய பிரதிவாதி கோச்சடை பெயரில் உள்ள பதிவு ஆவணம் இணையதள சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.5 ஆகவும்
6. 14.01.2024ம் தேதிய கூட்டுப் பட்டா (பட்டா எண்.1206) இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**வேண்டுகோளின்படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 17.04.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.17 14:14:42 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.